

தமிழ்ச்சிட்
குரல்: 1 இசை: 10
கரு 15 காசு
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்



# உங்கள் மடல்கள்

○ ஒருநாள் எங்கள் தமிழாசிரியர் ஒ. சுந்தரமூர்த்தி தமிழ்ச்சிட்டைப் படித்துக் காண்பித்தார். அவர் படிக்கப் படிக்க என் மனம் இருட்டு அறைக்கு வெளிச்சத்தைக் கொண்டு சென்றால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது. எங்களை ஆளாக்கிய பெருமை தங்களையே சாரும்.

– சோ. சிவாசி, ஏழாம் வகுப்பு, திருவையாறு.

○ "எண்ணுங்கால் சொல்லுங்கால் என்றும் சிறப்புற
எண்ணியாங்குக் கற்குங்கால் எல்லாமே — கண்ணென
ஆங்கென் னுடனுறைந்தின்(பு) ஈயும் தமிழ்ச்சிட்டை
யாங்கு மறந்தமைகோ யான்."

– இரா. பாலகணேசன், கூடலூர்

○ நற்றமிழ்ச் சிட்டானது நாற்றமிகு மலரானது
கற்போர்க்(கு) உணவானது கருத்தெல்லாம் மணமானது
தென்மொழிக்குத் துணையானது தெள்ளமுதிற்(கு) இணையானது
தென்றல் நடையானது தமிழ் காக்கும் படையானது.

– தமிழ்ச்செல்வன். மர்விநகர், பெங்களூர்–

○ தேன் அடையைப் பிழிந்தால் தேன் எவ்வாறு சொட்டுச் சொட்டாக விழுகிறதோ – அதுபோல் தமிழ்ச்சிட்டைப் படிக்கப் படிக்க அறிவும் ஆற்றலும் பண்பும் ஒழுக்கமும் பெறுகிறோம்.

– பள்ளி மாணவ மாணவிகள்; வஞ்சிப்பாளையம்

○ தேன்சிட்டைப் போன்று தமிழ்ச்சிட்டு இலக்கியங்கள் என்னும் மலர்களிலிருந்து எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு அழகிய கருத்துகளைக் கொடுத்து இன்ப வானில் எண்ணச் சிறகுகளை அடித்துப் பறக்கிறது. அது மேலும் கிழமை இதழாக மிளிர வேண்டுமென்பது என் அடங்கா ஆவல்.

– மகா. சொர்ணம்பாள், எதுமலை.

○ திருநலமும் அறநெறியும் திகழ்ந்தொளிரும்
தமிழ்நாட்டின் கண்கள் போன்ற
அருமைமிகு மாணவர்க்குத் தனித்தமிழில்
அளப்பரிய பற்றுண் டாக்கிப்
பெருநெறியாம் குறள் நெறியின் வழிநடந்தே
பைந்தமிழை வளர்க்கச் செய்யும்
பெருமைமிகு "தென்மொழியும், தமிழ்ச்சிட்டும்"
பல்லாண்டு வாழி! வாழி!

– கொக்கூர். மு. தமிழ்ச்செல்வன், ஊராட்சிமன்றம், காட்டுச்சேரி.



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–1 | தி. பி. ௧௯௯௮ (வைகாசி) விடை மே | இசை–10

## யாருக்காக நீங்கள்......?

தம்பி தங்கைகளே !

இவ்வுலகத்தில் நாம் பெற்றுக்கொள்வதைவிட, நாம் இவ்வுலகத்திற்காகக் கொடுத்துச் செல்வது மிகுதியாக இருக்கவேண்டும். தமக்காகவே பிறந்து, தமக்காகவே வாழ்ந்து, தமக்காகவே இறந்து போகின்றவர்களைப் பற்றி இவ்வுலகம் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. அப்படிப் பட்டவர்களை இந்த உலகத்தில் உள்ளவர்கள் ‘தந்நலக் காரர்கள்’ என்று இகழ்ந்து கூறுகின்றனர்கள். எனவே சிறுவர்களாக

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்–: இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

இருக்கும் பொழுதே நாம் எப்படி எப்படி வாழவேண்டும் என்றும், எந்தெந்த வகைகளில் இவ்வுலகத்திற்குப் பயன் உடையவர்களாக இருக்கலாம் என்பது பற்றியும் எண்ணி அதன்படி வாழ்தல் வேண்டும்.

இதுவரை இவ்வுலகத்தில் பிறந்து இறந்துபோனவர் கணக்கற்றவர்கள். அவர்களைப் பற்றியெல்லாம் நாம் நினைப்பதும் இல்லை; பேசுவதும் இல்லை; அவர்களை வாழ்த்தி வணங்குவதும் இல்லை. ஆனால் அவர்களில் சிலரை மட்டும் நாம் என்றென்றும் நினைத்து வருகின்றோம்; அவர்களைப்பற்றி மட்டும் அறிந்து கொள்ளுகின்றோம்; அவர்கள் இவ்வுலக மக்களுக்காகப் பட்ட துயரங்களையும் தொல்லைகளையும் எண்ணி எண்ணியும் அவையெல்லாம் நமக்கு வந்த துயரங்களாக நினைந்தும் வருந்துகின்றோம். தம்மைச் சுற்றியுள்ள மக்களுக்காக ஆணிகளால் அறையப்பட்டு மாண்ட இயேசு பெருமானையும், மக்களின் துயர்போக்கத் தம் அரச வாழ்க்கையையும் வெறுத்தொதுக்கிய புத்த பெருமானையும், உலக மக்களுக்கு அறிவு கொளுத்துவதற்காகவே பாடுபட்டு, இறுதியில் அம்மக்கள் கொடுத்த நஞ்சையே பரிசெனக் கருதி உண்டு மகிழ்வோடு இறந்த பேரறிஞன் சாக்ரடீசையும் எண்ணி இவ்வுலக மக்களுக்காக அவர்கள் பட்ட துன்பங்களையெல்லாம் நினைந்து கண்ணீர் வடிக்கின்றோம்.

உலகத்திற்கே அறநெறி வகுத்த வள்ளுவனையும், அரசியல் முறை சாற்றிய பிளேட்டோவையும், தொழிலாளர் நலம் பற்றிப் போராடிப் புதுமுறை கண்ட மார்க்சையும் நாம் மறந்து போகாமல் எண்ணி மகிழ்கின்றோம். அவர்களெல்லாரும் தங்களுக்காகத் தாங்களே வாழ்ந்து கொள்ளாமல், இவ்வுலக மக்கள் எல்லாரும் துன்பம் நீங்கி இன்பம் எய்தத் தங்கள் வாழ்க்கையையே பயன் படுத்திய பேரருள் வாய்ந்தவர்கள் ஆவார்கள். நம் காலத்திலேயே நம் உரிமைக்காகப் போராடி வந்த காந்தியடிகளையும், வ. உ. சி. போன்றவர்களையும் நாம் மறக்கமாட்டோம்.

இத்தகைய பெருமக்களை நாம் நினைந்து போற்றுவதற்கு என்ன காரணம்? அவர்களெல்லாரும் இவ்வுலகத்திலிருந்து பெற்ற பயன் சிறிது; உலகத்திற்குக் கொடுத்த பயனோ மிகவும் பெரிது எனவேதான் நம் உள்ளம் அவர்களுக்காக இரங்குகின்றது; அவர்களை நோக்கி வணங்குகின்றது. அவர்களை வாழ்த்துகின்றது.

குழந்தைகளே! நமக்குள் ஒருவன் பெரிய செல்வனாக இருக்கலாம். ஒருவன் மிகவும் ஏழையாக இருக்கலாம். யார் எப்படி இருந்தாலும் மக்களுக்காக வாழ்பவர்களையே மக்கள் மதிக்கின்றார்கள். நாம் எப்படிப் பிறந்தோம்; எங்குப் பிறந்தோம் என்பதைப் பற்றியெல்லாம் நினைத்துப் பாராமல் எதற்காகப் பிறந்தோம் என்பதையே நினைத்துப் பார்க்க வேண்டும். நாம் நமக்காகவோ, நம் உற்றார் உறவினர்க்காகவோ மட்டும் இவ்வுலகில் வாழக்கூடாது. நம்மைப் போன்ற எல்லா மக்களுக்காகவும் நாம் வாழ விரும்ப வேண்டும்.

நாம் நினைக்கின்ற ஒவ்வொரு நினைப்பிலும் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் நம்மைப் பற்றிய நினைவு குறைவாகவும் பிறரைப் பற்றிய நினைவு மிகுதியாகவும் இருக்கும்படி இப்பொழுதிருந்தே பழக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொருவரும் இப்படி நினைக்கவும், செய்யவும் பழகிக் கொண்டார்களானால் உலகில் போர் பூசல்களே இல்லாமற் போகும். துன்பம் குறைந்து இன்பம் பெருகும். இந்த உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் உடன் பிறந்தவர்கள் என்ற நினைவு உண்டாகும். இப்படிப்பட்ட நினைவும் செயலும் உள்ளவர்களே மக்கள் என்று சொல்லிக் கொள்ளத் தகுதி உடையவர்கள். அப்படி இல்லாதவர்கள் விலங்குகளே. ○

---

# தமிழ்ச்சிட்டின் சிறப்பு மலர்!


○ தமிழ்ச்சிட்டு பத்தாம் முறையாக உங்களிடம் பறந்து வந்திருக்கின்றது. இவ்வாண்டின் பன்னிரண்டாம் இதழ் **சிறப்பு மலராக** வெளிவரவிருக்கின்றது. எழுத்தாளர் தங்கள் படைப்புகளை இப்பொழுதே அனுப்பி வைத்துவிட வேண்டுகின்றோம்.

○ தமிழ்ச்சிட்டுக்கு உறுப்பினர் கட்டணம் அனுப்பியவர்கள் மலருக்கென்று தனியே பணம் விடுக்க வேண்டியதில்லை.

○ தனி இதழ் வேண்டுவோர் 35 காசு அனுப்பி மலரைப் பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்.

○ முன் பணம் கட்டாத விற்பனையாளர்கள் விற்பனை முன்பணம் விடுக்கும்பொழுது இதழ்ஒன்றுக்கு 35 காசுமேனி கணக்கிட்டுக் கழிவுநீக்கி அனுப்ப வேண்டுகின்றோம்.

— ஆசிரியர், தமிழ்ச்சிட்டு, கடலூர்—1.



# உலகம் சுற்றுவோம்

## ஆங்கில மொழிக்கு இனி 44 எழுத்துகள்.

இலண்டன் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு ஒன்று ஆங்கில மொழியில் இப்பொழுதுள்ள 26 எழுத்துகளை 44 எழுத்துகளாக மாற்றி அமைத்துள்ளது இவற்றில் Q, X என்ற இரண்டு எழுத்துகளும் இல்லை. மிகுதியுள்ள எழுத்துகளுடன் வேறு 20 புதிய எழுத்துகள் சேர்க்கப்படும்.

## இந்தியப் பஞ்சம்! அமெரிக்க மாணவர்கள் பட்டினி!

இந்தியாவில் வறட்சியால் வாடும் மக்களின் துயரம் அமெரிக்கக் கல்லூரி மாணவர்களை மனம் நெகிழச் செய்திருக்கின்றது. தாங்கள் உண்ணும் ஒருவேளை உணவை மறுத்து, அதனால் மீதமாகும் பணத்தைப் பஞ்சத்தால் வாடும் இந்திய மக்களுக்கு அனுப்புவதென அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். கடந்த ஆண்டில் இப்படிச் சேர்த்த பணம் ஏறத்தாழ உரு. 13 500 இந்தியாவுக்கு அனுப்பப் பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள 2000–க்கும் மேற்பட்ட கல்லூரிகளின் மாணவர்கள் இப்பெரும் பணியில் இறங்கியுள்ளனர்.

## பெருநோய்!

இப்பொழுது இந்தியாவில் ஏறத்தாழ 2,00,000 பேர் பெருநோயால் துன்புறுகின்றனர். இந்நோய் கடந்த 12 ஆண்டுகளில் இருந்ததைவிட இப்பொழுது குறைந்து வருகின்றது என்று கணக்கிட்டு இருக்கின்றனர்.

## நிலவில் மாந்தன்.

நிலா மண்டிலத்தில் மாந்தனை இறக்கும் முயற்சியில் உருசியா முதலிடம் பெறுகின்றது. நம் உலகிலிருந்து நிலவுக்குப் போய் வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. ஒருவேளை தாங்கள் கொண்டுள்ள திட்டம் சிறிது காலந் தாழுமானால், நிலாவைச் சுற்றிவரும் ஒரு துணைக்கோளையாவது விரைவில் அனுப்பப் போவதாக உருசிய அறிவியலறிஞர்கள் கூறுகின்றனர்.




# தொழில்

**- துரை மாணிக்கம்**

எத்தொழில் செய்யினும் மேன்மையென் றெண்ணு !
எவருன்ன வெறுத்தாலும் வருந்தாதே கண்ணு ! (எத்)

புத்தெழில் [1]ஓவம் கற்ருலும் — [2]கற்
படிமத்தில் உன்மனம் ஈடுபட்டாலும்,
பித்தளை இரும்பினைக் கொண்டு – வேலை
புரிந்திட ஓராவல் உனக்கு வந்தாலும் (எத்தொழில்)

தச்சர் பணி புரிந்தாலும் — கொல்லர்
தட்டாரைப் போல் தொழில் செய்ய வந்தாலும்,
அச்சுத் தொழிலைக் கற்ருலும் — மற்ற
ஆலைத் தொழில்களை நாளுஞ் செய்தாலும் (எத்தொழில்)

வாணிகஞ் செய்ய வந்தாலும் — பல
வண்டிகள் ஏறி நீ ஓட்ட வந்தாலும்,
காணி நிலங்கள் உழுது — மாடு
காளைகளோடு நீ வேலை செய்தாலும் (எத்தொழில்)

கடல்தனைத் தாண்ட வந்தாலும் — வான்
கப்பல் வழியாய்ப் பறக்க வந்தாலும்,
உடல் வருத்தி மலை யேறி — நீ
ஓயாது பணியாற்றும் நிலைக்கு வந்தாலும் (எத்தொழில்)

உறுதியை உள்ளத்திற் கொள்ளு — அதற்
கொண்ணுத சோம்பலை உடனே நீ தள்ளு!
இறுதிவரை யுழைத்தாலும் — மன
இடர்ப்பாடு நீக்கி உழைத்தலே மேலாம்! (எத்தொழில்)

---

[1] ஓவம் — ஓவியம். [2] கற்படிமம் — சிற்பம்.

# எங்கள் மணிப்பொறி.

இரெ. நடேசன், அண்ணுமலைநகர்.

எங்கள் வீட்டு மூலையில்
இருக்கும் நிலை மேடையில்
திங்கள் போல வட்டமாய்த்
திகழு கின்ற கருவிபார் !

வீட்டில் யாவர் தூங்கினும்
விழித்து நின்று கைகளால்
காட்டி நிற்கும் மணியினைக்
கணக்காய் அந்தக் கருவியே!

அப்பா வெளியூர் செல்கையில்
அழகுக் கைகள் நீட்டியே
தப்பில் லாமல் மணியினைத்
தலை நிமிர்ந்து காட்டிடும்.

காலைப் பொழுதில் விழிக்கவே
கடிய ஓசை எழுப்பியே
வேலை தன்னைச் செய்யென
வேண்டி நிற்கும் கருவியாம்.

தம்பி அதனை எடுத்துமே
தவறுய் முடுக்கி விட்டதால்
கம்பி அறுந்து போனது !
காட்டும் முள்ளும் நின்றதே !

---


## உங்களுக்கொரு பரிசு !

தம்பி தங்கைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச்சிட்டுக்கு ஐந்து மாணவர்களை உறுப்பினராக்கினுல் உங்கள் பெயருக்கு ஓராண்டிற்குத் 'தமிழ்ச்சிட்டு' இலவசமாக அனுப்பப்படும். ஒரு மாதத்திற்கே இச்சலுகை. எங்கே! இன்றே ஐந்து உறுப்பினர் தொகை உருபா பத்தையும் ஆறு முகவரிகளையும் அனுப்பி வைத்து இலவசமாகத் தமிழ்ச்சிட்டைப் படியுங்கள்.

— அமைச்சர், தமிழ்ச்சிட்டு, கடலூர்–1.



# குட்டிக்கதை

## வாழ்க்கை அறிவு!

கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் ஓர் ஆற்றைக் கடந்துபோக வேண்டியிருந்தது. அவர் ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்த ஓர் ஓடத்தில் ஏறி, ஓடக்காரனிடம் தம்மை அக்கரைக்குக் கொண்டு போகுமாறு சொன்னார். ஓடக்காரனும் அவரை ஏற்றிக்கொண்டு போனான்.

ஓடம் நடு ஆற்றில் போய்க்கொண்டு இருந்தது. ஓடக்காரனிடம் பேச்சுக் கொடுக்க விரும்பி, கல்லூரிப் பேராசிரியர் அவனிடம், ''ஏனப்பா, உனக்குப் படிக்கத் தெரியுமா ? என்று கேட்டார். ஏதோ கொஞ்சம் படித்திருப்பதாக அவன் சொன்னான். "கணிதம் தெரியுமா?" என்று மீண்டும் பேராசிரியர் கேட்டார். 'தெரியாது' என்றான் அவன்.''ஐயோ! வாழ்க்கையில் ஒரு பகுதியை இழந்துவிட்டாயே நீ'' என்று பேராசிரியர் வருந்தி, ''அப்படியானால் வரலாறு படித்திருக்கின்றாயா ?'' என்றார் 'இல்லீங்க' என்றான் அவன். ''அப்படியா, உன் வாழ்க்கையில் இன்னொரு பகுதி வீணாகப் போய்விட்டதே'' என்று பேராசிரியர் மீண்டும் வருந்தினார். அவர் மீண்டும் அவனிடம், '' இலக்கியமாவது படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். ''நான் ஒன்றும் படித்ததில்லையே'' என்று ஓடக்காரன் வருத்தத்தோடு சொன்னான். ''அடடா, உன் வாழ்க்கையில் பெரும் பகுதி வீணாகப் போய்விட்டதப்பா'' என்றார் பேராசிரியர்.

இவர்கள் இப்படியே பேசிக்கொண்டு போனபொழுது ஓடம் ஒரு சுழலில் சிக்கிக்கொண்டு திக்குமுக்காடியது. ஓடம் முழுகிவிடும் போலிருந்ததைக் கண்ட ஓடக்காரன் பேராசிரியரிடம், ''ஏன் ஐயா, உங்களுக்கு நீந்தத் தெரியுமா?'' என்று கேட்டான. பேராசிரியர் கலவரத்துடன் ''தெரியாதே அப்பா'' என்றார். ''அப்படியானால் உங்கள் வாழ்க்கையே இப்பொழுது வீணாகப் போகப்போகிறது; ஓடம் இனி முழுகிப் போகுமே'' என்று கூறிவிட்டு, ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கினான் ஓடக்காரன். பேராசிரியர் தண்ணீரில் மூழ்கி இறந்து போனார்.

உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் கெட்டிக் காரர்களே ! O

# இளமையில் கல்

— புத்திரங்கோட்டை சா. நடராசன்.

காலை மாலை திரிவதும்
கண்ட பொருளைத் தின்பதும்
வேலை யொன்று மின்றியே
வீணாய்க் காலம் கழிப்பதும்

நல்ல தில்லை தம்பி ! நீ
நாளை வாழ வழிகளைச்
சொல்லும் கல்வி கற்றிடு;
சோம்ப லை,அ கற்றிடு !

என்றும் சிறிய பிள்ளையாய்
இருக்கப் போவ தில்லை நீ;
கன்று காளை யாதல்போல்
காலப் போக்கில் வளருவாய்!

அன்று பெரிய பொறுப்புகள்
அடையும் உன்னை அறிகவே!
மன்றில் ஏறிப் பேசுவாய்;
மாநி லங்கள் ஆளுவாய்!

ஆலை கள்ந டத்துவாய்;
அரிய பெரிய செயல்களால்
மேலும் மேலும் உயருவாய்!
வீடும் நாடும் பயனுறும்!

எல்லாம் நாளை உன்கையில்!
எதற்கும் கல்வி தான்முதல்!
நல்ல தம்பி தங்கை காள்,
நன்கு படிக்க வேண்டுமே!



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## 7. அது, எனது.

இவன் எனது தம்பி.

இவனது சட்டைகள் சிறியதாய் இருக்கும்.

இந்த இரண்டு சொல் தொடர்களையும் கவனியுங்கள்.

முதல் தொடரில் உள்ள எனது என்ற சொல் கூட்டுச்சொல். அதில் என், அது என்ற இரண்டு சொற்கள் உள. இதில் உள்ள அது என்ற சொல் அஃறிணை. இங்கு அது என்ற சொல் எனக்குச் சொந்தமான ஓர் அஃறிணைப் பொருளைக் குறிக்கவே வந்திருக்கின்றது.

எனது கை; எனது குடை; உனது சட்டை; அவனது பை என்பவற்றில் கை, குடை, சட்டை, பை என்பவை அஃறிணைப் பொருள்கள். எனவே அவற்றைக் குறிக்க வரும் சுட்டுச்சொல் அது என்று வருவதில் பிழை இல்லை.

ஆனால் தம்பி உயர்திணைச் சொல். ஆகையால் அவ்வுயர்திணையைக் குறிக்க அஃறிணைச் சுட்டுச் சொல்லைப் பயன்படுத்தியது பிழை ஆயிற்று.

இவன் என் தம்பி என்று இருப்பதே சரியாகும். இதுபோலவே இவர் என் தந்தை; அவர் என் தாய்; இவள் என் தங்கை; அவரே என் தாத்தா என்பவை பிழையில்லாத் தொடர்களாகும்.

சுட்டப்படும் பெயர்ச்சொல் உயர்திணையாக இருக்குமானல் சுட்டுச்சொல் அஃறிணைச் சொல்லாக இருப்பது கூடாது.

இனி, இரண்டாவது தொடரைக் கவனியுங்கள்.

இவனது சட்டைகள் என்னும் இரண்டு சொற்களில் முதல் சொல்லில் உள்ள சுட்டுச்சொல் அது. (இவன் + அது) 'அது' என்பது அஃறிணை ஒருமைச்சொல். ஆனல் சுட்டப்படும் 'சட்டைகள்' என்பதோ அஃறிணை பன்மைச்சொல்.

எனவே 'இவனுடைய சட்டைகள்' என்றோ 'இவனது சட்டை' என்றோதாம் இருத்தல் வேண்டும்.

அதுபோலவே சிறியது என்ற சொல்லும் ஒருமையைக் குறிக்கும் சொல். சிறியன என்பதே பன்மைச் சொல். சட்டைகள் பலவானல் 'இவனுடைய சட்டைகள் சிறியனவாக இருக்கும்' என்றுதான் வருதல் வேண்டும். சட்டை ஒன்ருனல் 'இவன் சட்டை' அல்லது இவ்னது சட்டை சிறியதாய் இருக்கும் என்றே சொல்லுதல் வேண்டும்.

ஆகவே எனது, உனது, தனது; எமது, உமது, தமது என்பவற்றையும் என்னுடைய, உன்னுடைய, தன்னுடைய; எங்களுடைய, உங்களுடைய, தங்களுடைய என்ற சொற்களையும் எண், பொருள், இடம், திணை முதலியவற்றை அறிந்தே பயன்படுத்துதல் வேண்டும்.

'அரசன் தனது குடிகளிடம் அன்பாக இருந்தான்' என்பது பிழை.

'அரசன் தமது குடிகளிடம் அன்பாக இருந்தான்' என்பதும்பிழை.

'அரசர் தனது குடிகளிடம் அன்பாக இருந்தார்' என்பதும் பிழை.

'அரசர் தமது குடிகளிடம்' அன்பாக இருந்தார்' என்பதும் பிழை.

'அரசன் தன் குடிகளிடம்' என்பதே சரி.

'அரசர் தம் குடிகளிடம்' என்பதும் சரி.

அவை போலவே 'அரசன் தன்னுடைய குடிகளிடம்' என்பதும் 'அரசர் தம்முடைய குடிகளிடம்' என்பதும் சரியானவையே. O

# சேம்சு ஆலன் நூல்கள்

அ. பொன்னையன் — புலிகரம்பலூர்.

தமிழ்ச்சிட்டாம் தம்பி தங்கைகளே!

சென்ற இதழில் பெரியோர் கதை வரிசையில் சேம்சு ஆலன் கதையை அறிந்தீர்கள். ஆனால் அவரால் எழுதப்பட்டுள்ள நூல்களை அறிந்துகொள்ளவில்லை. உயர்ந்த நெறிகளைக் கொண்டிலங்கும் அவரின் நூல்களை நம் கப்பலோட்டிய தமிழர் திரு. வ. உ. சி. அவர்கள் படித்து உள்ளத்தைப் பறிகொடுத்தாராம். அவற்றை மொழி பெயர்க்க பலகாலும் நினைத்தார்; என்றாலும் ஈடேறவில்லை. இறுதியாக அவர் கோவையில் வெறுங்காவல் தண்டனை பெற்றுச் சிறையில் இருந்தபோது முதல் நூலை மொழி பெயர்த்தார். அதுதான் "மனம் போல வாழ்வு" (As a man thinketh) என்ற நூலாகும்.

அடுத்து ஒன்றன்பின் ஒன்றாக "அகமே புறம்"; "வலிமைக்கு மார்க்கம்" (The path of prosperity); "சாந்திக்கு மார்க்கம்" (The way of peace) என்ற நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டார். இவற்றிற்கு திரு. கா. அப்பாத்துரை அவர்களின் மொழி பெயர்ப்பும் இருக்கிறது. அவை வெவ்வேறு பெயர்களைத் தாங்கி வந்திருக்கின்றன. "பேரின்பச் சோலை" என்ற நூல் இவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

நாள் வழிபாட்டிற்காக சேம்சு ஆலனின் நெறிமுறைகள் தொகுக்கப்பட்டுள்ள "நாள்வழி நற்சிந்தனைகள்" என்ற நூல் திரு. கு. பரமசிவன் அவர்களால் மொழிச்சிறப்புடன் பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் "மக்களும் அமைப்புகளும்" என்ற நூல் அரசியல் பற்றிப்பேசுகிறது. பிற நூல்களும், கணக்கற்ற கட்டுரைகளும் உள்ளன; அன்பார்ந்த தம்பி தங்கைகளே! ஆலனின் மெய்யுணர்வு நூல்கள் நமது பொய்யாமொழிக்கு விளக்கமென அமைந்திருப்பதால், இன்றே பள்ளி நூலகத்திலோ, பொது நூலகத்திலோ, விற்பனை நிலையங்களிலோ, வாங்கிப் படிக்கத் தொடங்குங்கள்; செயல்படுங்கள், கற்றனைத்தூறும் அறிவு! O

# தெரிந்து கொள்ளுங்கள்

o நம் வயிற்றுக்குள் இருக்கும் சிறுகுடலின் நீளம் ஏறத்தாழ 24 அடியாகும். இக்குடல்தான் நம் வயிற்று அறையின் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டுள்ளது. சிறுகுடல் நம் வயிற்றுக்குள் இருந்துகொண்டு புழு துடிப்பதைப் போலும் அலைநெளிவதைப் போலும் எப்பொழுதும் அசைந்துகொண்டே இருக்கின்றது.

o பலாக்கொட்டையை மிகுதியாக உண்டால் மலச்சிக்கல் ஏற்படும்.

o பல் நோய் உள்ளவர்கள் ஒவ்வொருநாளும் குப்பைமேனி இலையை கையளவு பறித்து வாயிலிட்டு மென்றுவர பல் நோய் நலமாகும்.

o ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள 'பிரிபோவுல்ப்' என்ற மிகவும் பழைய நூலில் உள்ள ஆங்கிலத்திற்கும் இப்பொழுதுள்ள ஆங்கிலத்திற்கும் வேறுபாடு நிறைய உண்டு என்றும், இக் காலத்தில் மிக நன்ருக ஆங்கிலம் படித்தவர்களும் அதிலுள்ள சொற்களில் முக்கால் பங்குச் சொற்களைக்கூட புரிந்துகொள்வது கடினம் என்றும் கூறுகின்றனர்.

o தமிழ் மொழியில் ஒரு சொல்லுக்குக் குறைந்தது ஓரெழுத்தும் மிகுந்தது ஒன்பது எழுத்தும் வரும் என்று பேரகத்தியம் என்னும் இலக்கண நூல் சொல்லுகின்றது.

o பௌத்தருக்குப் பிடகங்களும், சைனருக்கு எண்மறைகளும், பாரசீகர்க்குச் செண்டு அவத்த என்ற நூலும், கிறித்துவர்க்குப் பைபிள் என்ற நூலும், மகமதியர்க்குக் குரான் என்ற நூலும், ஆரியர்க்கு இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நூல்களும் தம்தம் சமய நூல்களாக இருக்கின்றன.

o தொல்காப்பியர் காலத்துக்கு முன் தமிழ் மொழியில் 16 உயிரெழுத்துகளும் 35 மெய்யெழுத்துகளும் ஆக 51 எழுத்துகள் இருந்தன. தொல்காப்பியரே அவற்றை 12 உயிரும் 18 மெய்யுமாகக் குறைத்து இலக்கணம் வகுத்திருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

o 'சிகப்பு' என்று எழுதல் பிழை. 'சிவப்பு' என்று எழுதுவதே சரி. 'சிவ' என்பதே பகுதி. o

# நகைச்சுவைப் பழமொழிகள்.

- முக்கால் பணத்துக் குதிரை மூன்று பணத்துப் புல் தின்றது.
- மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்வது போல்.
- நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தது போல்.
- தாடி பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டதுபோல்.
- சிட்டுக்குருவி தலையிலே பனங்காயை வைத்தானும்.
- கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுபோல்.
- குருடும் செவிடும் கூத்துப் பார்க்கப் போய் குருடு கூத்தைப் பழித்ததாம்; செவிடு பாட்டைப் பழித்ததாம்.
- குளத்துமேல் சினம்; கால் கழுவாதது மிச்சம்.
- குடல் கூழுக்கழுததாம், கொண்டை பூவுக்கழுததாம்.
- திருமணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தானும்.
- கத்தரிக்காய்க்குக் காலுங்கையும் முளைத்தது போல்.
- ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தது போல்
- எருமை மாட்டின் மேல் மழை பெய்தது போல்.
- உள்ளூர்க் கடனும் உள்ளங்கைச் சிரங்கும் அரித்துக்கொண்டே இருக்கும்.
- ஊத்தைப் பல்லுக்கு விளாங்காய் மருத்துவமா ?
- ஊமையன் பேசச் செவிடன் கேட்டது போல்.
- வெல்லம் தின்கிறவன் ஒருவன். விரலைச் சூப்புகிறவன் ஒருவனு?
- வீட்டுக்குள் கஞ்சியைக் குடிக்கிறது; மீசையில் வெண்ணெயைத் தடவிக்கொண்டு வெளியே போகிறது.
- வாய் கரும்பு; கை இரும்பு.
- வம்பனுக்கு வழி எங்கே? போகிறவன் தலைமேலே !
- மொட்டைத் தலையில் பேன்போல!
- மூக்கறையனுக்கு முகம் பார்க்கிற கண்ணுடி மேல் பகை.
- தானிருக்கும் அழகுக்குத் தடவிக் கொண்டாளாம் வேப்ப நெய்.
- தன் வீட்டுக் கதவைப் பெயர்த்து, அயல் வீட்டுக்கு வைத்துவிட்டு, விடிய விடிய நாய் ஓட்டினது போல்.
- செவல்பட்டிக்கு வழியெதுவென்ருல், செவலைக்காளை ஐம்பது உருபா என்கிருன்.

# உலகிலேயே........

தொகுப்பு: வ. சனுர்த்தனன்.

1. ......மிகுதியாக மழை பெய்யும் இடம் 'சிரபுஞ்சி'. மழையளவு ஆண்டுக்கு ஏறத்தாழ 500''. இருப்பிடம் இந்தியா.

2. ......உயரமான இடம் ஆசியாவில் உள்ள 'பாமீர்முடிச்சு'. உயரம் ஏறத்தாழ 32,000'.

3. ......மிகப் பெரிய பாலைநிலம் ஆப்பிரிக்காவில் உள்ள 'சகாரா'. பரப்பு 36,00,000 சதுரகற்கள்.

4. ......நீண்ட இருப்புப்பாதை 'டிரான்சு சைபீரியன் இருப்புப் பாதை'. 'மாசுகோ' விலிருந்து 'விலாடிவாசுடிக்' வரையில் செல்லும் இருப்புப்பாதையின் நீளம் 5390 கற்கள்.

5. ......நீண்ட மலைத்தொடர் அமெரிக்காவில் உள்ள 'ஆண்டீசு மலைத்தொடர்'. நீளம் 4500 கற்கள்.

6. ......மிக உயரமான இடத்தில் உள்ள ஏரி 'திடிகாக'. உயரம் ஏறத்தாழ 12,000'. இருப்பிடம் 'தென் அமெரிக்கா'.

7. ......மிக நீளமான அணை 'ஈராகுட் அணை'. 15,748'. இருப்பிடம் 'இந்தியா'.

8. ......மிகப் பெரிய குடியரசு நாடு 'அமெரிக்க இணைப்பு நாடு'. மொத்த இணைப்பு நாடுகள் 50.

9. ......எரிமலைகள் மிகுதி உள்ள நாடு 'சப்பான்'. மொத்த எண்ணிக்கை 192.

10. ......மிக வெப்பமான இடம் 'அசியாசியா' (AZIAZIA). வெப்ப அளவு 130°, F. இருப்பிடம் இலிபியா.

11. ......நீண்ட புகைவண்டி நிலையமேடை 'சோன்புரி புகைவண்டி நிலையமேடை'. நீளம் 2400 அடி. இருப்பிடம் 'இந்தியா'.

12. ... ... பெரிய நூல் நிலையம் இலெனின் தேசிய நூல் நிலையம். (The Lenin National Library) 'உருசியா' வில் 'மாசுகோ' வில் இருக்கிறது.

13. ......மிக உயரமான மக்கள் 'அமெரிக்கர்கள்'. உயரம் ஏறத்தாழ $7\frac{1}{2}$ அடி.

14. ......மக்கள் தொகையில் பெரிய நகரம் 'தோக்கியோ'. மக்கள் தொகை 1 கோடிக்குமேல். இருப்பிடம் 'சப்பான்'. (சப்பானின் தலைநகரம்).

15. ......மிகப் பெரிய பிரமிடு 'கீசே பிரமிடு'. உயரம் 841'. அடிப்பக்க அகலம் 755'. இருப்பிடம் 'எகிப்து'

16. ...... மிகப் பெரிய குழந்தைகள் மனமகிழ் மன்றம் 'வால்ட் டிசினி உலகம்'. பரப்பு 100குறுக்கம்(ஏக்கர்).இருப்பிடம் 'அமெரிக்கா'.

17. ...... கோபுரங்களில் மிக உயரமானது 'பாரிசு'. நகரில் உள்ள 'ஐபல்' கோபுரம். உயரம் 984 அடி.

---

## ஔரங்கசீப்பின் தந்திரம்.

மொகலாய மன்னன் ஔரங்கசீப்பின் மகன் ஒருவன், அவன்மேல் வருத்தம் காரணமாக, அவனுடைய எதிரிகள் பக்கம் சேர்ந்துகொண்டு, அரசிற்கு மாறுன நடவடிக்கைகளில் பகைவர்களுக்கு உதவியாக இருந்து வந்தான். அவன் படை இருப்பிடங்களையும், வேறுபல கமுக்கமான செய்திகளையும் எதிரிகளுக்கு உரைத்துவிட்டால் என்ன செய்வது என்று ஔரங்கசீப் வருந்தினுன். இதை முறியடிக்க எண்ணங்கொண்டு ஒரு தந்திரம் செய்தான். உடனே எதிரிகள் வயம் உள்ள தன் மகனுக்குப் பின்வருமாறு ஒரு மடல் எழுதினுன். "மகனே, உடனடியாகத் திரும்பிவிடாதே. எதிரிகளுடன் மிகவும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய பட்டாள அமைப்புகளைப் பற்றிய கமுக்கங்களை யெல்லாம் ஒன்று விடாது அறிந்துகொண்டு வந்துசேர்" இம்மடலை ஒருவனிடம் கொடுத்து அதை எதிரிகள் கைகளில் சிக்குமாறும் செய்தான். பகைவர்கள் அந்த மடலைப் பார்த்தார்கள். அவ்வளவுதான்! ஔரங்கசீப்பின் மகன் அடித்து விரட்டப்பட்டான்.

— கிசர் முகமது, 11-ஆம் வகுப்பு. சென்னை-5.




புதிர் 1: பெருஞ்செல்வர் ஒருவர் ஒரு நகரில் உள்ள தங்கு விடுதிக்குச் சென்றார். விடுதி உரிமையாளர் அவரிடம் அங்குத் தங்குவதற்கு நாள் ஒன்றுக்கு ஒரு பொற்காசு கட்டணம் ஆகும் என்றும் ஒரு மாதத்திற்குரிய பொற்காசுகளை முன்பே செலுத்தவேண்டுமென்றும் கூறினார். அது மே மாதமாகையால் செல்வர் 31 பொற்காசுகளைக் கட்டினார். அத்துடன் அவர் விடுதி உரிமையாளரிடம், நான் இந்த 31 நாட்களுக்குள் என்றைக்கு வேண்டுமானாலும் அறையைக் காலி செய்வேன். அன்றைக்கு மீதமுள்ள பொற்காசுகளைக் கொடுத்துவிட வேண்டும்'' என்றார். இதற்கு ஒப்புக்கொண்ட விடுதியாளர் 31 பொற்காசுகளையும் 5 மோதிரங்களாகச் செய்து தம் விரல்களில் அணிந்து கொண்டார். செல்வர் என்றைக்கு விடுதி அறையைக் காலி செய்தாலும் அவர்க்குரிய மீதியுள்ள காசுகளை அவ் விடுதியாளர் தரவியலும் என்றால் அவர் அணிந்துள்ள ஒவ்வொரு மோதிரமும் எத்தனை எத்தனைப் பொற்காசுகளால் செய்யப்பட்டவை ?

புதிர் 2: கண்ணன், வண்ணன், திண்ணன் என்னும் மூவருக்கும் உரிய மாந்தோப்பு ஒன்றிருந்தது. ஒரு நாள் மூவரும் தோப்புக்குச் சென்று பறித்த மொத்த காய்களை ஒன்றாகக் குவித்து வைத்து விட்டு வீடு திரும்பினர். மூவரும் சென்ற பின் கண்ணன் மனைவி தன் கைக்குழந்தையுடன் போய், அங்குக் குவித்துள்ள மாங்காய்களை எண்ணி மூன்றாகப் பங்கிட்டாள். ஒரு காய் மிகுந்தது. மிகுந்த காயைத் தன் கைப்பிள்ளையிடம் கொடுத்துவிட்டுத் தனக்குரிய ஒரு பங்கை எடுத்துப் போனாள். அதன் பின் வண்ணன் மனைவியும் கைப்பிள்ளையுடன் சென்றாள். அவளும் அங்குள்ள காய்களை மூன்றாகப் பகிரவே, ஒரு காய் மிகுந்தது. அவளும் அந்தக் காயைத் தன் பிள்ளையிடம் தந்துவிட்டுத் தனக்குரிய ஒரு பங்கை எடுத்துச் சென்றாள். மூன்றாவதாகத் திண்ணன் மனைவியும் தன் கைப்பிள்ளையுடன் சென்று மிகுந்துள்ள காய்களை மூன்றாகப் பிரித்தாள். இப்பொழுதும் ஒரு காய் மிகவே, மிகுந்த காயைத் தன் பிள்ளையிடம் கொடுத்துத் தான் ஒரு பங்கை எடுத்துப் போனாள். இறுதியாகக் கண்ணன், வண்ணன், திண்ணன் மூவரும் சென்று எஞ்சிய காய்களை மூன்றாகப் பகிர்ந்ததில் ஆளுக்கு இரண்டிரண்டு காய்கள் கிடைத்தன என்றால் அன்று பறித்த மொத்தக் காய்கள் எத்தனை ? ஒவ்வொருவரின் பங்குக்கும் எத்தனை எத்தனைக் காய்கள் வந்தன ?

—இரா. மங்கையர்க்கரசி, மே/பா. தா. இராமலிங்கம்.
காவனூர் (அஞ்சல்) (வழி) திருமுட்டம். (விடை அடுத்த இதழில்).




O மாணவர்கள் தமிழின் உயர்வை அறிந்துகொள்ளத் தமிழ்ச்சிட்டு மிகவும் பயன்படுகிறது. வெளிநாட்டுச் செய்திகளை இன்னும் கொஞ்சம் மிகுதியாய் எழுதுங்கள். மாணவர் பின்பற்றவேண்டிய கருத்து, செயல், நடை, உடை, தோற்றம் பற்றிய கட்டுரைகள் மிகவும் பயன்படும்.

— பொ. மணிவண்ணன், பத்தாம் வகுப்பு, சாத்தனூர் அஞ்சல்.

O மாணவர்கள் சிலர் தங்களைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொண்டு பிற நல்ல மாணவர்களை இகழ்ந்து புண் படுத்தி வருகின்றார்கள். அவர்களுக்கு நல்ல சாட்டையடியாக அமைந்து விட்டது, சென்ற இதழில் வெளிவந்த ஒரு பெரியாரின் கதை.

இரா. இளம்வழுதி (முரளீதரன்), ச. அறிவழகன் (சம்சுதீன்)
இரா. மணிமொழி (சந்தர்), — அழகாபுரம்.

O ஒரு சிறிய விதையானது முளைத்து வளர்ந்து பெரிய மரமாகிப் பலர்க்கும் பலவகைகளில் பயன் படுவதைப் போல் 'தமிழ்ச் சிட்டு' உருவில் சிறுத்தும் பக்கங்களில் குறைந்தும் இருந்தாலும், நாளடைவில் வளர்ந்து ஓர் உயரிய தாளிகையாய் விளங்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

— சௌந்தரராசன், விரியூர்.

O இக்காலத்தில் வெளிவரும் பொத்தகங்களும், செய்தித்தாள்களும், எங்களைப் போன்ற பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைக் கலக்கின்றன. ஆனால், தங்களின் தமிழ்ச்சிட்டும், தென்மொழியும் எங்களைப் போன்ற வருங்காலச் செல்வங்களின் மனதிலே இருக்கும் இருளை அகற்றும் ஒளி விளக்குகளாய் அமைந்துள்ளன. ஆகவே தங்கள் இதழைக் கிழமை இதழாக வெளியிடவும், மாணவர்க்கான மணிமொழிப் பகுதியில் புதிய பல அறிவுரைகளையும், சேருங்கள். நினைவில் வைக்கவேண்டிய பழமொழிகள் பல திரிபு பெற்றுத் தவறாகப் பேசப்பட்டு வருவதைத்தடுக்கவும் திருத்தமாக வெளியிடவும் தங்களாலேயே முடியும் என்று நினைத்து இக் கருத்தை வெளியிடுகின்றேன். தி. வீ. பாண்டியன்.

# பயன் மொழிகள் !

- உயர்ந்தவர்கள் தங்களைவிடத் தாழ்ந்தவர்களிடம் பழகவும் அஞ்சுவார்கள். ஆனால் தாழ்ந்த பண்பு உள்ளவர்களோ அவர்களை உறவினர்களாகவே எண்ணிச் சேர்ந்துகொள்வார்கள்.

- தம் பணியில் அமைதியாக ஈடுபடாதவரும், தாம் எடுத்த பணியின் அளவையும் தம் ஆற்றலையும் அறியாமல் வீண்பெருமை பேசுபவரும் விரைந்து கெடக்கூடியவர்கள்.

- துன்பத்திலும் ஒரு நன்மை உண்டு. தன்னுடன் உறவாடுபவர்களின் தன்மையை அளவிடும் கோல் அது.

- தீமை கண்ட பொழுது அழும்படி இடித்துக் கூறி, உலகியல்புகளை அறிவிக்கும் நல்லவர்களோடு ஆய்ந்து தொடர்பு கொள்க.

- முள் செடியை இளமையிலேயே அழித்தல் வேண்டும். வளர்ந்த பொழுது களைய முற்படுவாரின் கைகளை அது வருத்தும்.

- ஒழுக்கத்தையும், வாய்மையையும், தீயவற்றிற்கு நாணுதலையும் உயர்ந்தவர்கள் என்றும் கைவிடமாட்டார்கள்.

- தகுதியில்லாதவர்கள் செல்வம் பதவி முதலியவற்றால் உயர்ந்திருப்பினும் உயர்ந்தவர் ஆகார்; தகுதி உள்ளவர்கள் செல்வம், பதவி முதலியவற்றால் தாழ்நிலை உற்றாலும் அவர்கள் தாழ்ந்தவர்கள் ஆகார்.

- இவர் எனக்கு இப்படிப்பட்டவர்; இவருக்கு நான் இப்படிப்பட்டவன் என்று பெருமையாகச் சொன்னாலேயே நட்பின் உயர்வு குறைந்துவிடும்.

(திருக்குறள் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.